பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
02 12 2024 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியாவின் வலிமையை எடுத்துக்கூறும் விதத்தில் காவல்துறையின் பணிகள் அமைய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. இளம் தொழில்முனைவோர்களின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்களிக்கும் என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

3. சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் நவம்பர் மாதத்தில் ஒரு லட்சத்து 82 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வசூலிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

4. திருவண்ணாமலையில் பெரிய பாறை உருண்டு வீட்டின் மீது விழுந்து இடர்பாடுகளில் சிக்கியுள்ள 7 பேரை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

5. உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் குகேஷ்-கும், சீனாவின் **Ding Liren**-க்கும் இடையே நடைபெற்ற போட்டி டிராவில் முடிவடைந்தது.

<<<<>>>>

சைபர் குற்றங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் எழுந்துள்ள புதிய சவால்களை காவல்துறையினர் எதிர்கொண்டு அவற்றை முறியடிக்கும் விதத்தில் அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் நடைபெற்ற காவல்துறை இயக்குநர்களின் 3 நாள் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியில் நேற்று உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, தற்போது உலகில் எழுந்துள்ள பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில் இந்த மாநாட்டில் பல்வேறு விஷயங்கள் விவாதிக்கப்பட்டுள்ளது, பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியாவின் வலிமையை எடுத்துக்கூறும் விதத்தில் நம்முடைய பணிகள் அமைய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

காவல்துறையினா் தங்களது திறமைகளை வெளிக்கொண்டு வரும் விதத்தில் 100 நகரங்களில் நவீன நகர காவல்துறை கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று அவா் கேட்டுக்கொண்டாா்.

புதிய தொழில்நுட்பங்களை காவல்துறையினா் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினாா்.

இந்த நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவா் விருது பெற்ற நுண்ணறிவு காவல்துறையினருக்கு பிரதமா் பதக்கங்களை வழங்கினாா்.

தேசிய பாதுகாப்பு மற்றும் காவல்துறையின் எதிர்கால திட்டங்கள் குறித்து பல்வேறு கருத்துகளை பிரதமா் திரு. நரேந்திர மோடி அவர்களிடம் பகிர்ந்துகொண்டாா்.

இந்த 3 நாள் மாநாட்டில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை, அதிதீவிர இடதுசாரி பயங்கரவாதம், சைபா் குற்றம், பொருளாதார பாதுகாப்பு, கடலோர பாதுகாப்பு மற்றும் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளா் தெரிவிக்கிறாா்.

<<<<>>>>

இந்தியாவின் பொருளாதார வளா்ச்சி மேலும் அதிகரிப்பதற்கு ஆராய்ச்சிக கல்வித்துறை புத்தொழில் நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சா் திரு. ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டுள்ளாா்.

கவுஹாத்தியில் இந்திய சா்வதேச அறிவியல் விழாவையொட்டி நடைபெற்ற வட்டமேசை கூட்டத்தில் உரையாற்றிய அவா், வளா்ந்த நாடாக இந்தியா முன்னேறுவதற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் இந்தியா்கள் முக்கிய பங்கு வகிக்கிறாா்கள் என்று அவா் சுட்டிக்காட்டினாா்.

இந்தியாவின் அளப்பிறய திறனை பயன்படுத்தும் விதத்தில் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டாா்.

நமது பாரம்பரிய அறிவை நவீன அறிவியலுடன் இணைத்து முன்னேறுவதற்கு வழிவகைகளைக் கண்டறிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டாா்.

உயிரி தொழில்நுட்பம் மற்றும் விண்வெளித் துறைகளில் சா்வதேச நிபுணத்துவம் மற்றும் தொழில்துறை தலைவா்களைக் கொண்டு கூட்டு முயற்சிகளை அதிகரிக்க வேண்டும் என்று அவா் வலியுறுத்தினாா்.

இந்தியா அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் உலகின் முதன்மையான நாடாக திகழ அறிவியல் துறையினர் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

இளம் தொழில்முனைவோர்களின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடைபெற்ற தொழில்முனைவோருக்கான கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு உரையாற்றிய அவர், உலக நாடுகள் இந்தியாவின் தலைமைத்துவத்தை உற்றுநோக்கி வருவதாகவும், இளையதலைமுறையினர் இதனைக் கருத்தில்கொண்டு புதிய கருத்துகளுடன் தொழில்துறையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இளையதலைமுறையினர் தங்களது திறன்களை மேம்படுத்திக்கொள்வதன் மூலம் சவால்களை துணிச்சலுடன் எதிர்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

தனிமனித முன்னேற்றம் சமுதாய முன்னேற்றமாக மாறி அது நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் தலைமையில் அறிவிக்கப்படும் வளர்ச்சித் திட்டங்கள் நாட்டின் சமத்துவப் பொருளாதாரத்தை வளர்ச்சி அடையச் செய்யும் என்று அவர் கூறினார். பின்னர் தொழில் முனைவோர்களுடன் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கலந்துரையாடினார்.

<<<<>>>>

திருவண்ணாமலையில் பெய்த கனமழை காரணமாக அண்ணாமலையார் மலையில் மண்சரிவு ஏற்பட்டு பெரிய பாறை உருண்டு வீட்டின் மீது விழுந்து இடர்பாடுகளில் சிக்கியுள்ள 7 பேரை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

திருவண்ணாமலையில் நேற்று கனமழை பெய்தது. அப்போது அண்ணாமலையார் மலையில் மண்சரிவு ஏற்பட்டு மலையில் இருந்து சுமார் 40 டன் எடைகொண்ட பாறை வ.உ.சி. நகர் 11வது தெருவின் குடியிருப்பு பகுதியில் இரண்டு வீடுகளின் மீது விழுந்தது.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நீலகிரியில் பெய்துவரும் கனமழை காரணமாக அங்கு சில பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

மேலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகை வரை இயக்கப்படும் ரயில்சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் 8 புள்ளி 5 சதவீத அளவுக்கு உயர்ந்துள்ளது.

கடந்த மாதம் ஒரு லட்சத்து 82 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வசூல் செய்யப்பட்டுள்ளதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டு சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் ஒரு லட்சத்து 68 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

மின்னணு பணப் பரிவர்த்தனை மூலம் அக்டோபர் மாதம் 16 புள்ளி ஐந்து எட்டு பில்லியன் நிதி பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் 23 லட்சத்து 49 ஆயிரம் கோடி ரூபாய் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டைக் காட்டிலும் இதன் வளர்ச்சி 45 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் குகேஷ்-கும், தற்போதைய உலக செஸ் சாம்பியன் சீனாவின் **Ding Liren**-க்கும் நடைபெற்ற போட்டி டிராவில் முடிவடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற 3 போட்டிகளும் டிராவில் முடிவடைந்ததால் இருவருக்கும் தலா 3 புள்ளிகள் கிடைத்தன.

இந்த சாம்பியன் பட்டத்தை வெல்வதற்கு இருவருக்கும் இன்னும் நான்கரை புள்ளிகள் தேவைப்படுகிறது.

---------------

கடந்த மாதம் நடைபெற்ற ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய மகளிர் ஹாக்கி அணியினர் வெற்றி பெற்றதையடுத்து, அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கும் நிகழ்ச்சி பட்னாவில் நடைபெற்றது.

பீஹார் மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் வீராங்கனைகளுக்கு தலா 10 லட்சம் ரூபாய் வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

**<<<<The End>>>>**